1975 நவம்பர் 12]

விசைத்தறிகள்

*314 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அதிக விசைத் தறிகளுக்கு உரிமம் வழங்கும்படி மத்திய அரசிடம் நமது மாநில அரசு கோரிக்கை ஏதேனும் அண்மையில் விடுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், மத்திய அரசு அளித்த பதில் யாது?

மாண்புமிகு திரு. செ மாதவன்: (அ) ஆம்.

(இ) இதுவரை இறுதி முடிவு தெரிவிக்கப்படவில்லை.

Inam lands

*315. Q.—Thiru B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Revenue be pleased to state:

(a) whether appeals against the taking over of the Inam lands in Tirunelveli district and Dharmapuri are pending with the Supreme Court; and.

(b) if so, the steps taken thereon?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) தர்மபுரி மாவட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட எந்த இனாம் அல்லது மைனர் இனாம் எஸ்டேட் சம்பந்தமாக இந்தியத் தலைமை நீதி மன்றத்தில் அப்பீல் ஏதும் இல்லை. ஆனால் திருநெல்வேலி மாவட்டம், கொடாரங்குளம் கிராமத்தில் உள்ள இனாம் எஸ்டேட் எடுத்துக் கொள்ளப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட சிவில் அப்பீல் இந்தியத் தலைமை நீதி மன்றத்தில் விசாரணையில் உள்ளது.

(இ) தலைமை நீதி மன்றத்தில், அப்பீல் துரிதமாக பைசல் செய்யப்பட வேண்டும் என்று அரசால் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Thiru B. VENKATASWAMY: From the answer given by the Hon. Minister I came to understand that there is a case pending in the Supreme Court from Hosur Taluk. May I know from the Hon. Minister whether it will be expedited, so that people there will be benefited by getting lands for them?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அதுபோன்ற வழக்குபற்றி எதுவும் தகவல் கொடுத்தால் அதைப்பற்றி விசாரிக்கின்றேன்.

Movement of rice.

* 316. *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state :

(*a*) whether the State Government have sought the Co-operation of the Railways to check illicit movement of rice ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) கள்ளத்தனமாக அரிசி கடத்திச் செல்லப்படுவதைத் தடுக்க வருவாய்த் துறை அலுவலர்களும், கண்காணிப்புக் காவற் குழுவினரும் ரயில்களை நிறுத்திச் சோதனையிட்டு வந்தனர். இதனால், ரயில்கள் உரிய நேரத்தில் வருவது பாதிக்கப்பட்டது. ரயில்கள் ஓடிக் கொண்டிருக்கையிலேயே சோதனை முழுவதையும் முடித்து விடலாம் என்று ரயில்வே பொது மேலாளர் கருத்துத் தெரிவித்ததோடு வருவாய்த் துறை அலுவலர்கள், கண்காணிப்புக் காவற்குழுவினர் ஆகியோர் ரயில்களில் பயணம் செய்ய இயலும் வகையில் அவர்களுக்குப் பயண இசைவுச் சீட்டுகளை வழங்கவும் அவர் ஒப்புக் கொண்டார். இந்த ஏற்பாட்டினை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

(முற்பகல் 10-00)

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister for Revenue, whether any seizure has been made in Railways?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கேள்வி ரயில்வே துறையோடு நாம் ஏற்பாடு செய்து கொண்டிருப்பதைப் பற்றியது. எவ்வளவு டன் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: ரயில்வே மூலமாக அரிசியை மற்றப் பகுதிகளுக்கு அனுப்ப அரசு ஏற்பாடு செய்திருந்தாலும் இன்னும் பல இடங்களில் ஸ்டாக் இருக்கிறது என்று சொல்லு கிறார்கள். அப்படிப்பட்ட ஸ்டாக்குகளைத் துரிதமாக வெளியேற்ற அரசாங்கம் ஆவன செய்யுமா?